அணைய வேண்டிய அயோத் "தீ"

செ. திவான்

அணைய வேண்டிய அயோத் "தீ"

வரலாற்றாசிரியர்

செ. திவான், எம்.ஏ., எம்.பில்.,

சுஹைனா பதிப்பகம்
106F, 4-A, திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002.
© 0462 - 572665

ஆசிரியரின் 49வது நூல்

முதற்பதிப்பு : 15-3-2002

உரிமை : ஆசிரியருக்கே

விலை : ரூபாய் ஐந்து

சமர்ப்பணம்

பொதுவுடமை இயக்கப் போராளி, கூர்மையான இலக்கிய விமர்சகர், கார்க்கியின் மொழி பெயர்ப்பாளர், கவிஞர், நாவலாசிரியர், சாகித்தியஅகாதெமி விருதுபெற்ற அறிஞர்

தொ.மு.சி. ரகுநாதன்

(20-10-1923 - 31-12-2001) அவர்களுக்கு....

சுஹைனா பதிப்பகம்

அணைய வேண்டிய அயோத் "தீ"

கால அளவு

உலகின் கால அளவை ஹிந்து மதம் இப்படிச் சொல்கிறது. நிமிடம் முப்பது கொண்டது ஒரு காட்டை. காட்டை முப்பது கொண்டது ஒரு கலை, அக் 'கலை' முப்பது கொண்டது ஒரு முகூர்த்தம். முகூர்த்தம் முப்பது கொண்டது ஓர் 'இராப்பகல்'. இராப்பகல் இரண்டுங்கூடியது ஒரு 'நாள்'. நாள் பதினைந்து கொண்டது ' ஒரு பட்சம்'. சுக்கில பட்சம், கிருஷ்ண பட்சம் இரண்டுங்கொண்டது 'ஒரு மாதம்'. மாதம் இரண்டு கொண்டது ஒரு இருது. இருது மூன்று கொண்டது ஓர் அயனம். தேவர்களுக்குப்பகற் காலமாகிய உத்தராயணம் இரவாகிய தட்சணாயனம் இரண்டுங் கொண்டது ஒரு மனுஷியமான வருடம். இந்த வருடம் ஒன்றுக்குத் தேவநாள் ஒன்று, தேவநாள் முப்பதுக்குத் தேவமாதம் ஒன்று, தேவ மாதம் பன்னிரண்டிற்குத் 'தேவமான' வருடம் ஒன்று, இந்தப்படி தேவமாதத்தில் 4900 வருடங்களும், மனுஷிய மாதத்தில், அதாவது மனிதர்களுக்கு 17 லட்சத்தி 28000 ஆண்டுகள் கொண்டது கிருதயுகம்.

திரேதாயுகம்

யுகங்களில் முதன்மையானது இந்த திரேதாயுகம். யுகம் என்பது கடவுளின் ஆண்டு. இரண்டாவதுயுகம் திரேதாயுகம். இது கடவுளுக்கு 3600 வருடங்களும் மனிதர்களுக்கு 12,96000 வருடங்கள் (மூன்றாவது யுகம் துவாபரயுகம் இது 8,64000 ஆண்டுகள் கொண்டது. இது நான்காவது யுகம் சதுர்யுகம் 43,20000 வருடங்கள் கொண்டது. இது தான் கடையுகம்; கலியுகம் கண்ணபிரான் கிருஷ்ணர் இறந்தவுடன் பிறந்த ஆண்டு. அதாவது இயேசு கிறிஸ்து / ஈசா (அலை) பிறப்பதற்கு 3102 ஆண்டுகளுக்கு முந்தையது.)

யுகங்களின் காலக்கணக்கினைச் சொல்லவந்ததில் காரணம் உண்டு. நடப்பது கலியுகம், ஏறத்தாழ 5000 ஆண்டுகளை தாண்டி நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு 8,64000 ஆண்டுகளுக்கு முன்பு துவாபரயுகம், அதற்கு முந்தைய 12 லட்சத்தி 96000 வருடங்கள் கொண்டது திரேதாயுகம். இந்த திரேதாயுகத்தில் பிறந்ததாக சொல்லப்படுவர் இராமர்.

12 லட்சம் ஆண்டு அதாவது 12 லட்சத்திற்கு மேலான ஆண்டுகளுக்கு முந்திப் பிறந்தவர் ராமர். இராமாயணமும் ராமரும் உண்மை வரலாறு அல்ல; இது கற்பனைக்கதை என்பார் தந்தைபெரியார். ஆரியருக்கும் திராவிடருக்கும் நடந்த போராட்டத்தின் கதை வடிவம், திராவிடரைத் தூற்றுவதற்கென்றே எழுதப்பட்டது ராமாயணம் என்று தமிழறிஞர்கள் சுவாமி வேதாசலம் (மறைமலையடிகள்)

பி.வி. மாணிக்க நாயகர், பி. சிதம்பரம்பிள்ளை, வெ.ப. சுப்பிரமணிய முதலியார், எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, சந்திரசேகரபாவலர், பண்டித நேரு, சுவாமி விவேகானந்தர் போன்றோர் பல்வேறு இடங்களில் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

இதற்குப்பிறகும் இராமரை ஒரு வரலாற்று மனிதராக ஏற்றுக் கொண்டாலும் அவர் பிறந்தது அயோத்தியில் தானா? என்ற கேள்வி எழுகிறது. அயோத்தியில் பிறந்தார் என்று வைத்துக்கொண்டாலும், அயோத்தியில் எந்த இடத்தில் பிறந்தார் என்ற கேள்வி பிறக்கிறது.

ஜதகா இராமாயணம்

பௌத்த இலக்கியமான ஜதகா இராமாயணம் இராமரின் தந்தை தசரதர் காசி (வாரணாசி) நகரை ஆண்டதாக குறிப்பிடுகிறார். தசரதன் இறந்தபிறகு காசி நகரை இராமர் ஆண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். இந்த பௌத்த இலக்கியத்தை ஒட்டியே வால்மீகி, 'இராமாயணம்' எழுதினார்.

பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்த காண்டம், உத்தர காண்டம் எனும் ஏழு காண்டங்களைக் கொண்ட 12,000 சுலோங்களை உடைய வால்மீகி இராமாயணத்தில் இராமர் பிறந்த அயோத்தி கங்கை நதிக் கரையில் இருப்பதாக எழுதியுள்ளார். எனவே இந்த அயோத்தி காசியில் அடங்கியதாக இருக்க வேண்டும். ஆனால் இன்று இராமஜென்மபூமி (இராமர் பிறந்த இடம்) என்று சொல்லப்படும் அயோத்தி கங்கைக் கரையில் இல்லை; 'சரயு' நதிக்கரையில் உள்ளது. ஆக அடிப்படையே இல்லாத ஒரு விஷயத்திற்கு இந்தியத் திருநாடெங்கும் அவலமும் அலங்கோலமும், அல்லல்களும், அவஸ்தைகளும், அவதிகளும், அதிரடிப்போராட்டங்களும், அப்பாவி மக்களின் அநியாயப்பலிகளும் அனுதினமும் நடந்துகொண்டேயிருக்கிறது என்பதை நடுநிலையாளர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

வால்மீகி இராமாயணம்

வால்மீகி இராமாயணத்தில் காணப்படும் 'சரயூ' நதி, கங்கை நதியுடன் கலக்கிறது. ஆனால், இன்றைய சரயூ நதி, 'கிராப்தி' நதியுடன் கலக்கிறது. வால்மீகி இராமாயணத்தில் கூறப்படும் சரயூ நதி மேற்கு நோக்கி ஓடுகிறது. இன்று நேப்பாளத்தில் மட்டும் தான் சரயூ நதி மேற்கு நோக்கி ஓடுகிறது.

ஆத இராமர் என்ற நாயகர் இருந்தாரா? இல்லையா? அப்படியே இருந்திருப்பின் அவர் இருந்த அயோத்தி என்பது எது? என்று அடிப்படையிலேயே சிக்கல்களும், ஆதாரபூர்வமான தகவல்களும் இருப்பதால் அயோத்திப் பிரச்சினை என்பது அண்மையில் உருவாக்கப்பட்ட பிரச்சினை என்று கூறுவதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்?

அதற்கு அடுத்த நிலையில், அயோத்தியில் இராமர் கோவில் இருந்ததா? அதை முகலாய மன்னர் பாபர் இடித்து விட்டு புதிய பள்ளிவாசலை எழுப்பினாரா?

தொல் பொருள் ஆய்வாளர் ஏ.ஏ. பூரர்

வரலாற்று ரீதியில் ஏ.ஏ. பூரர் என்ற தொல் பொருள் துறையின் இயக்குநர், அயோத்தியில் இடிக்கப்பட்ட பாபர் மசூதியினை ஹிஜ்ரி 930ல் (அதாவது கி.பி. 1523 செப்டம்பர் 23 முதல் 1524 செப்டம்பர் வரையான) அடிக்கல் நாட்டி கட்டத்துவங்கினார்கள் என்று குறிப்பிடுகிறார்.

இந்தியாவை முகலாய மன்னர்கள் ஆட்சி செய்வதற்கு முன்பு டில்லியை கடைசியாக ஆட்சி செய்தவர் இப்ராஹீம் லோடி. இவரது காலம் கி.பி. 1517 – 1526 ஆகும். இவரது காலத்தில் தான் அயோத்தியில் மசூதி கட்டப்பட்டது. 27–3–1934இல் நடைபெற்ற கலவரத்தின் போது இந்துத்தீவிரவாதிகள், இப்ராஹீம் லோடி அடிக்கல் நாட்டிய பாரசீக மொழியில் இருந்த கல்வெட்டினை அப்புறப்படுத்தி விட்டனர். (இன்று அந்த அடிக்கல் அங்கு இல்லை. ஏன்! மசூதியையே முழுவதுமாக இடித்துத்தகர்த்து விட்டார்களே!)

இப்ராஹீம் லோடி

முகலாய மன்னர் பாபர் (கி.பி. 1526 – 1530) தனது ஆட்சியின் போது தனது கவர்னர் மீர்பாகி என்பவரைக் கொண்டு இப்ராஹீம் லோடி கட்டத்துவங்கிய இப்பள்ளிவாசலை கட்டி முடிக்கச் செய்தார். அதற்காக டோலா பூரிலிருந்து 26 தூண்களை 24–12–1528ல் பாபர் அனுப்பிவைத்தார் என்பதும் வரலாற்றில் மறுக்க இயலாத சான்றுகளாகும்.

மீர்பாகி

ஆக ஆரம்பத்தில் லோடி மசூதி என்று இருந்தது; பின்னர் பாபர் காலத்தில் பாபரின் கவர்னர் மீர்பாகி அதனை முழுவதுமாகக் கட்டி முடித்த பின் அதற்கு 'பாபர் மஸ்ஜித்' என்று பெயர் வழங்கலாயிற்று.

இந்த பாபர் மஸ்ஜித்திற்கு வடக்கே சுமார் 50 கஜம் தொலைவில் இராமஜன்மஸ்தான் கோயில் சிதையாமல் இன்னும் உள்ளது. இதன் நுழைவாயிலில் 'ஜன்மஸ்தான் தினயாத்திரிகா' என்று இந்தியில் எழுதப்பட்டும் உள்ளது.

பாபர் நாமா

பாபர் தனது சுயசரிதையில் இராமர் கோயிலை இடித்ததாக எங்கும் குறிப்பிடவில்லை. ஆனால் மத தீவிரவாதிகள் பாபர் வரலாற்றில் (பாபர் நாமா) 2–4–1528 முதல் 18–9–1528 வரையுள்ள சம்பவங்கள் காணப்படவில்லை. இந்த கால கட்டத்தில் தான் பாபர் இராமர் கோயிலை இடித்தார் என்று வாதிடுகிறார்கள்.

இது அர்த்தமற்றது, ஏனென்றால் அந்த ஆண்டு பாபர் அயோத்திக்கு வரவே இல்லை. அலகாபாத் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் சுசில் ஜி வத்சவா இதனை உறுதியுடன் தெரிவித்துள்ளார்.

ஹுமாயூன் நாமா

பாபரின் மகள் குல்பதன் பேகம் எழுதிய 'ஹுமாயூன் நாமா' என்ற சரித்திரத்தில் 'பாபர் கி.பி. 1528 ஏப்ரல் 5 முதல் ஆக்ராவில் மூன்று மாதங்கள் தங்கி இருந்தார். மகன் ஹுமாயூனும் மகள் குல்பதன் பேகமும் அப்போது உடனிருந்தனர். பின்னர் பாபர் 1528 ஜூலை 10ல் டோலாப்பூர், பதேப்பூசிக்ரி போன்ற ஊர்களுக்குச் சென்று விட்டு ஆக்ராவிற்குத்திரும்பினார்' என எழுதப்பட்டுள்ளது.

மதத்தீவிரவாதிகள், கூறுகின்ற 'பாபர் வரலாற்றில்' விடப்பட்டுள்ள காலப்பகுதியில் ஆக்ரா, பதேப்பூர் சிக்ரி, டோலாப்பூர் ஆகிய ஊர்களில் தனது பிள்ளைகளுடன் பாபர் இருந்த செய்தி வரலாற்றில் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இப்ராஹீம் லோடியால் கட்டத்துவங்கப்பட்டு பாபரின் ஆளுநரால் கட்டி முடிக்கப்பட்டது ஓர் பள்ளிவாசல். இதில் பாபர் நேரடியாக சம்பந்தப்படவில்லை; அடுத்து அவர் அயோத்திக்கு வரவே இல்லை. பின்னர் **எப்படி இல்லாத இராமர் கோயிலை அங்கு வந்திராத பாபர் இடித்திருப்பார்?** நடுநிலையாளர்கள் சிந்திக்கட்டும்!

பிரச்சினை எப்படி வந்தது?

கி.பி. 1855இல் நடைபெற்ற இந்து, முஸ்லிம் மோதலின் போது கூட பாபர் மசூதியை ஹிந்துக்கள் ராமரின் பிறப்பிடம் என்று கூறவில்லை.

உருவாக்கப்பட்ட பிரச்சினை

கி.பி. 1885இல் நடைபெற்ற வழக்கில் மசூதிக்கு அருகே இருக்கும் சபுத்ராவில் (மேடையில்) கோவில் கட்ட அனுமதித்தால் ரத்த ஆறு ஓடும். எனவே கோயில் கட்டுவதற்கு என்னால் அனுமதி வழங்க இயலாது என்று ஹிந்து நீதிபதியே தீர்ப்புத் தந்துள்ளார்.

கி.பி. 1949ல் அங்கு மாவட்ட நீதிபதியாக இருந்த கே.கே. நாயர் இந்து வெறிக் கூட்டத்திற்கு உதவி செய்தார். அவரும் மதத் தீவிரவாதிகளும் சேர்ந்து ராமர் சிலையை மசூதிக்குள் வைத்திட முயற்சித்தனர்; வெற்றியும் கண்டனர். பின்னர் இந்த நீதிபதி 'ஜனசங்கத்தின்' (பாரதிய ஜனதாவின் முந்தையப்பெயர்) நாடாளுமன்ற உறுப்பினராகவும் ஆக்கப்பட்டார். பின்னர் 1955இல் முஸ்லிம்கள் மசூதிக்குச் செல்வது தடுக்கப்பட்டது. 1984இல் மசூதியை மீட்க வேண்டும் என்ற கோஷம் கிளம்பியது.

1949 முதல்...

ஆக, திரேதாயுகத்தில் தோன்றிய ராமர் குறித்து, கி.பி. 1855 வரை அங்கு எந்தப் பிரச்சினையும் இல்லை; பின் மத மோதல்கள் எழுந்தன. 1949ல் ராமஜென்ம பூமி பிரச்சினை உருவாக்கப்பட்டது. 1984ல் மீண்டும் எழுந்தது.

1992 டிசம்பர் 6இல் மசூதி இடித்து தகர்க்கப்பட்டது. ஆயிரக்கணக்கில் உயிர்கள் பலிவாங்கப்பட்டது. இதற்கு நீதிகேட்டு போராடிக் கொண்டிருக்கின்றனர் முஸ்லிம்கள். ஆனால், அரசாங்கங்களோ சித்து வேலைகாட்டிவருகிறது. மதவெறியர்கள் மஸ்ஜித் இருந்த இடத்தில் ஆலயம் எழுப்ப அனைத்துப்பணிகளையும் செய்து வருகிறார்கள். அந்த முயற்சிகளும் மிக வேகமாக முடுக்கி விடப்பட்டு நடைபெற்றுவருவதை பத்திரிக்கைகளில் பார்க்கலாம். இது நியாயந்தானா? இது மதச்சார்பற்ற நாடுதானா? என்று நல்லவர்கள் கேட்கிறார்கள்.

ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட்

"நீதி மன்றத் தீர்ப்பின் மூலம் தீர்க்கப்படவேண்டிய; தீர்க்கப்படக் கூடிய பிரச்சினை அல்ல இது", என்ற புதிய நிலைப்பாட்டை இந்து மத வகுப்புவாதிகள் எடுத்துவருகிறார்கள். சட்டத்தை தங்கள் கையில் எடுத்துக்கொள்வதில் உறுதியோடு செயலாற்றி வருகின்றனர். இதன் விளைவு எப்படி இருக்கும். மறைந்த ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் கூறியுள்ள வரிகள் இதோ!

"**விளைவு நெருக்கடியும் கலவரங்களுமாகத்தானிருக்கும். அதுவும் குறிப்பிட்ட சச்சரவுக்குரிய இடத்தோடு அது நின்றுவிடாது. மாறாக நாடு முழுவதும் அது பரவிவிடும்**" என்று எச்சரித்துள்ளார். நாட்டின் நலனில் அக்கறை கொண்டோர் நல்லதையே விரும்புகின்றனர்; நல்லது நடக்கட்டும் என்று ஆண்டவனை வேண்டுகின்றனர். மாநில, மத்திய ஆட்சியாளர்கள் இதனை உணர்ந்து உண்மை உள்ளத்துடன் உறுதியுடன் நடவடிக்கை எடுத்து நாட்டில் நியாத்தை நிலைநிறுத்த வேண்டும்.

புரட்சியை உருவாக்கும் மிகப்பெரிய ஆயுதங்கள் அநீதி எதிர்ப்புக்கள் தான். அநீதியை எதிர்த்து அலை அலையென மக்கள் ஆர்த்தெழுகின்றபோது அரசாங்கங்கள் ஒன்றும் செய்திட இயலாது என்பது உலக வரலாற்றில் பல்வேறு படிப்பினைகள் சொல்லும் உண்மைகள் ஆகும்.

அயோத்தீ...

ஆட்சியாளர்களே அநீதிக்குத் துணைபோகாதீர்கள். முஸ்லிம் மக்களை அணைத்துச் செல்ல வேண்டிய பிரச்சினை இது; அநியாயமாக பற்ற வைக்கப்பட்டுள்ள, பற்றி எரிகின்ற, அயோத்தீ அணைக்கப்படவேண்டும். முஸ்லிம்களின் உரிமை நிலைநாட்டப்பட வேண்டும். இந்தியா மதச் சார்பற்ற நாடு என்பது அப்போது தான் உலக அரங்களில் ஒப்புக்கொள்ளப்படும்.

(மனாருல் ஹுதா, ஜனவரி 2002)

நீதி மன்றங்களில் அயோத்தி...

அன்னைத் திருநாட்டில் இன்று நாடெங்கும் கொழுந்து விட்டெரியும் அயோத்தீ பிரச்சினையில், நீதி மன்றங்கள் ஆற்றிய பணிகள் பற்றிய கடந்த கால சரித்திரக் குறிப்புக்கள் இதோ . . .

இந்திய வரலாற்றில்

தசரத இராமரின் அயோத்தியை அடையாளம் காட்டுவதற்குரிய பழங்கால காசுகளோ, கல்வெட்டுக்களோ இதுவரை கிடைக்கவில்லை. தற்கால அயோத்தியை குப்தர் காலத்திற்கு முந்திய இராமரோடு சம்பந்தப்படுத்த நம்பிக்கையான முறையில் நம்மால் முடியவில்லை. இது மிகவும் ஏமாற்றம் அளிக்கத்தக்க விஷயமே என்பர் சரித்திர அறிஞர் ஆர்.எஸ். சர்மா. (வகுப்புவாத வரலாறும் இராமரின் அயோத்தியும், பக். 32, 1990.)

பிரித்தானியரின் பிரித்தாளும் சூழ்ச்சி

இந்திய மக்களை அடிமைப்படுத்தி நாட்டின் செல்வத்தைச் சுரண்டிச் சென்று கொண்டிருந்த ஆங்கிலேயேர்கள் இந்தியாவில் ஹிந்துக்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையாக இருந்தால் தமது அரசாங்கத்தை காப்பாற்றிக் கொள்ளவும், தக்கவைத்துக் கொள்ளவும் முடியாது என்பதனை நன்றாக உணர்ந்திருந்தார்கள். எனவே நாட்டில் இரு சமூகத்தினர்களையும் பிரித்து, அதன்மூலம் அரசியில் லாபம் பெறத் துவங்கினர். இதற்கு இந்திய வரலாற்றில் எத்தனையோ சரித்திரச்சான்றுகளை குவித்திட முடியும். அதே நிலையைத்தான் இன்றைய அயோத்தியிலும் ஏற்படுத்தினர் வெள்ளையர்.

1855 - 56

பாபரி மஸ்ஜித் பிரச்சினை குறித்து விரிவாக ஆய்வு செய்தவர் செர்சிங் I.A.S. ஆவார். இவர் கிபி 1855 – 56க்கு முன்னர் அங்கு இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே எந்த விதத் தகராறும் இருந்ததில்லை என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

1845இல் அயோத்திக்கு வருகை புரிந்த சர் ஹென்றி லாரன்ஸ் எழுதிய, 'Essay on the Indian Army and oude' இந்திய ராணுவம் மற்றும் அவ்த் குறித்த கட்டுரைகள் என்ற நூலும், மேஜர் ஜெனரல் ஸ்லீமேன் எழுதிய **'A Journey through the kindom of oude in 1849 - 1850 A.D'**. என்ற தமது பயண நூலும் இதற்கு சான்றுகள் என்பர் பேராசிரியர் இ. அருட் செல்வன் (பாபரி மஸ்ஜித் ராமஜன்ம பூமியா? ஒரு வரலாற்று பார்வை. 1990, பக். 32,33)

ஹனுமான் குன்றில் டிசம்பரில் துவங்கிய முதல் சர்ச்சை

1855 டிசம்பரில் அயோத்தியில் உள்ள ஹனுமான்குன்றில் (ஹனுமான்கிரி) பைரகிகள் எனப்படும் விஷ்ணு பக்தர்களால், அங்கிருந்த முஸ்லிம் பெரியவரின் அடக்கஸ்தலம் முதல் முதலாக அழித்தொழிக்கப்பட்டது. இச்செயலைக் கண்டித்து மௌலவி அமீர்அலி தலைமையில் முஸ்லிம்கள் போராட முடிவெடுத்தனர். 75அடி உயரமுள்ள குன்றான ஹனுமான் கிரிக்கு செல்லத் திரண்டனர். அப்போது விஷ்ணுபக்தர்கள் ஆங்கிலேயேரின் உதவியை நாடினர். பிரிட்டிஷ் இராணுவத்தினர் ஜெனரல் அவ்ட்ராம் தலைமையில் முஸ்லிம்களை வழிமறித்து தாக்கிக் கொன்றனர்.

நவாப் வாஜித்அலிஷா

அப்போது மௌலவி அமீர்அலி முதன் முதலில் களப் பலியானார். (ஷஹீதானார்) இரு சமூகங்களுக்கிடையே குரோதம் உருவாக்கப்பட்டது. 1856 பிப்ரவரி 13இல் அவ்தாவின் நவாப் வாஜித்அலிஷா கைது செய்யப்பட்டார். அவ்மாகாணம் முழுவதும் ஆங்கிலேயேர் வசமாயிற்று.

1857 சுதந்திரப்போர்

இந்தக் காலகட்டத்தில் ஆங்கிலேயரை எதிர்த்து நாடெங்கும் சிப்பாய்களின் புரட்சி நடைபெற்றது. அப்போது அந்தப்பகுதியில் தங்கியிருந்த வெள்ளையர்களுக்கு அனுமன் ஹிரியின் பூஜாரி உணவுப் பொருட்களை விநியோகித்து வந்தார். அவர் உணவுப் பொருட்களை அன்று அனுப்பாமல் இருந்திருந்தால், ஆங்கிலேயேப்படை நாட்டைக் காக்கப் போராடிய விடுதலைப் படையிடம் தோற்றிருக்கும் அல்லது பசியினால் மடிந்திருக்கும். (Root cause of Babri Majid Dispute II, Radiance viewsweekly 3-9 Dec - 89 P.9)

ஹனுமன்கிரி பூஜாரி ஆங்கிலேயருக்கு உணவுப் பொருட்களை அளிக்கவில்லையென்றால் ஆங்கிலப்படை அன்று தோற்றிருக்கும் என்பது வரலாற்றில் மறைத்திட இயலாத உண்மையாகும்.

ராமர் திண்ணை (ராம்சபூட்ரா)

வெள்ளையர்களுக்கு உதவியதற்காக ஹனுமன்கிரி பூஜாரி பெற்ற சன்மானம் என்ன தெரியுமா? பாபரி மஸ்ஜித் வளாகத்திற்குள் அமைந்த ராம்சபூட்ரா எனும் திண்ணையைப் பெற்றதுதான். அப்போது ஹனுமன் கிரி பூஜாரி இதற்கும் தானே பூஜாரி என்று அறிவித்துக் கொண்டார்.

முதல் வழக்கு

காலங்கள் கழிந்தது. ராமர் திண்ணை என்று அழைக்கப்பட்ட ராமசபூட்ராவின் பூஜாரியாக தன்னை அறிவித்துக் கொண்ட ஹனுமான் கிரியின்

பூஜாரி ரகுபர்தாஸ் இந்தத் திண்ணை மீது கோயில் கட்ட அனுமதிக்குமாறு சப்–ஜட்ஜ் பண்டிட் ஹரி கிருஷ்ண சாஸ்திரியின் நீதிமன்றத்தில் உரிமையியல் (சிவில்) வழக்குத் தாக்கல் செய்தார். வழக்கு எண் 61/280 of 1885.

1885 டிசம்பர் 24

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பண்டிட் ஹரிகிருஷ்ண சாஸ்திரி, இந்தக் கால கட்டத்தில் கோயில் கட்ட அனுமதி கொடுப்பது, கலவரத்திற்கும், படுகொலைக்கும் வழிவகுப்பதாக இருக்கும், என்று தீர்ப்பளித்து 1885 டிசம்பர் 24இல் அந்த வழக்கைத் தள்ளுபடி செய்தார். ஆனால் திண்ணை அமைந்திருக்கும் இடம் பூஜாரிக்குச் சொந்தமானது என்றும் தீர்ப்பளித்தார்.

பூஜாரியின் தொடர்ந்த முயற்சி – விஷவித்து விதைக்கப்படல்

அத்தோடு பூஜாரி மஹாண்ட் ரகுபர்தாஸ் சும்மா இருக்கவில்லை. தான் தொடுத்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டதற்குப் பின்னர், இராமர் கோயில் இருந்த இடத்தில் தான் அதனை இடித்து பாபர் மசூதியைக் கட்டினார் என்று புதுக்கதை விடலானார். இன்று நாடெங்கும் பூதாரகமாக எழுந்துள்ள பிரச்சினைக்கு விஷவித்து அப்போதுதான் விதைக்கப்பட்டது.

பைஸாபாத்மாவட்ட நீதிபதி

பூஜாரி மஹாண்ட் ரகுபர்தாஸ், பாபரி மஸ்ஜித் வாளாகத்தில் கோயில் கட்ட அனுமதிவேண்டி மீண்டும் பைஸாபாத் மாவட்ட நீதிபதியின் முன் வழக்குத் தொடுத்தார்.

J.E.A. சேம்பியர்ஸ்

இந்த வழக்கினை நீதிபதி J.E.A. சேம்பியர்ஸ் அப்போது விசாரித்தார். 1886 மார்ச் 26இல் இந்த வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால், கோவிலை இடித்து மஸ்ஜித் எழுப்பப்பட்டது என்று பூஜாரி சொன்ன கற்பனை கதை குறித்து நீதிபதி கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை; எனவே அது உண்மையென நம்புவதற்கும், நாடெங்கும் பொய்ப் பிரச்சாரம் செய்வதற்கும் பயன்பட்டது.

அவ்த் மாகாண நீதியியல் ஆணையாளர்

பூஜாரி ரகுபர்தாஸ் இத்துடன் நிற்கவில்லை. 1886 மே 25இல் அவ்த் மாகாண நீதியியல் ஆணையாளர் முன் மேல் முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்தார். ஆணையாளர் W. யங். தமது தீர்ப்பினை 1–11–1886இல் அளித்தார். அதில் கோயில் கட்ட அனுமதி மறுத்தார். அத்தோடு முந்தைய நீதிமன்றங்கள் பூஜாரியின் வழக்கை தள்ளுபடி செய்தது சரியானதே என்றும் தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார்.

1934 கலவரம்

கி.பி. 1886இல் இவ்வழக்குகள் தள்ளுபடியானதற்குப் பின் சிறுசிறு பிணக்குகள் இருந்து வந்தன. 1934இல் மூண்ட வகுப்புக் கலவரத்தில் பாபர் மஸ்ஜித் பலமாக சேதப்படுத்தப்பட்டது: வெளிச் சுவர்கள் இடிந்தன. தூபிகள் சேதமடைந்தன. பின்னர் அரசாங்கம் அவைகளை முஸ்லிம் கட்டட ஒப்பந்தக்காரர் மூலம் கட்டி, அதைச் சரிசெய்தனர்.

1949 டிசம்பர் 22.

1949 டிசம்பர் 22 இரவில் ஸ்ரீராமர் – சீதாதேவியின் விக்கிரகங்கள் பாபர் மஸ்ஜிதினுள் வைக்கப்பட்டது. திடீரென்று யாருமில்லாத வேளையில் சில ஹிந்துக்கள் அங்கு அந்தச் சிலைகளை கொண்டு வைத்தனர் என்று, மாவட்ட மாஜிஸ்ட்ரேட் K.K. நய்யார் மாநில முதல்வருக்கும், தலைமைச் செயலாளருக்கும் அனுப்பிய ரேடியோ செய்தியில் அப்போது அதனைக் கூறியுள்ளார்.

பிரதமர் நேரு

பள்ளிவாசலுக்குள் விக்கிரங்கள் வைக்கப்பட்ட செய்தியை அறிந்த பிரதம மந்திரி பண்டித ஜவர்ஹர்லால் நேரு இத்தவறை உடனே நிவர்த்திக்குமாறு உத்திரப்பிரதேச முதல் அமைச்சர் கோவிந்த வல்லப பந்திற்கு உத்திரவிட்டார். உ.பி. தலைமைச் செயலாளர் பகவான் சஹாயும் காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் U.N. லாஹிரியும் விக்கிரங்களை அங்கிருந்து உடனே அப்புறப்படுத்துமாறு உத்திரவுகளை அனுப்பினார்கள். ஆனால் நீதிபதி K.K. நய்யார் அதற்கு செவி சாய்க்கவில்லை.

மூடப்பட்ட மஸ்ஜித்

‘சிலைகளை அப்புறப்படுத்தினால் அப்பாவி உயிர்கள் பலியாகும்’ என்று சாக்குப்போக்குச் சொல்லிக் கொண்டே இருந்தார் நய்யார். அதன் விளைவு டிசம்பர் 23, 1949 மாலை 5 மணிக்கு சக்தி வாய்ந்த பூட்டு மூலம் மஸ்ஜிதின் பிரதான வாயிலை மூடினார். நீதிமன்றத்தின் பொறுப்பில் சாவியைக் கொடுத்துவிட்டார். (விசுவஹிந்து பரிஷத் மாவட்ட மாஜிஸ்ட்ரேட் K.K. நய்யாரின் உருவப்படத்தை இப்போது பாபரி மஸ்ஜித் வளாகத்திற்குள் அமைத்து அவருக்கு நன்றிக் காணிக்கை செலுத்தி வருவதை இன்றும் மஸ்ஜித் வளாகத்தில் காணலாம்).

பிரம்மச்சாரி

அப்போதைய பைஸாபாத் மாவட்ட காங்கிரஸ் கட்சியின் செயலாளர் பிரம்மச்சாரி, பாபரி மஸ்ஜிதை முஸ்லிம்களுக்கு திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று கோரி 1950இல் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தார். அப்போதே போராட்டம் தொடர்ந்து அது தனிவரலாறு ஆகும்.

பைஸாபாத் அயோத்தி நகரகூடுதல் முதல் வகுப்பு நீதிமன்றம்

1949 டிசம்பர் 29இல் பைஸாபாத் அயோத்தி நகர கூடுதல் முதல் வகுப்பு நீதிபதி மார்க்கண்டேசிங் முன் பாபரி மஸ்ஜித் குறித்த வழக்கு விசாரணைக்கு வந்தது. இந்தியக் கிரிமினல் சட்டத்தின் 145வது பிரிவின் கீழ், பள்ளிவாசலை நீதிமன்றப் பாதுகாவலின் கீழ் (Attachment) கொண்டு வர அவர் உத்திரவிட்டார்.

பிரியாதட்ராம்

பைஸாபாத் அயோத்தி நகராட்சி தலைவர் பிரியாதட்ராம் சொத்தின் பராமரிப்பாளராகவும் (Receiver) நியமிக்கப்பட்டார். அவர், நீதிபதியிடம் ஒப்புதல் பெற்று, மஸ்ஜிதிற்குள் இருக்கும் சிலைகளுக்கு, வழிபாடுகள் செய்ய நான்கு பூஜாரிகளை நியமித்தார். பூஜை நடப்பதை ஒரு பகுதி நுழைவாயிலில் இருந்து தரிசிக்கவும் ஹிந்துக்களுக்கு அனுமதி தரப்பட்டது. முஸ்லிம்கள் பள்ளிவாசலுக்கு அருகில் செல்லும் அனுமதியும் கூட முற்றிலுமாக மறுக்கப்பட்டது.

கோபால்சிங் விஸாரத்

1950 ஜனவரி 6இல் பைஸாபாத் சிவில் நீதிமன்றத்தில் கோபால்சிங் விஸாரத் என்பவர் பாபரி மஸ்ஜிதில் வைக்கப்பட்டுள்ள விக்கிரகங்களை வணங்க தங்கு தடையின்றி செல்ல அனுமதிக்க வேண்டுமென்று வழக்குத் தொடர்ந்தார். அதே வேளையில் அங்குள்ள சிலைகளை அப்புறப்படுத்தக் கோரி ஐந்து முஸ்லிம்களும், பைஸாபாத் துணை ஆணையாளர் J.N. உக்ரா, மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் ஆகியோர் முறையிட்டனர்.

N.N. சத்தர்

அப்போதைய உத்திரப்பிரதேச அரசாங்கத்தின் தரப்பில், **சர்ச்சைக்குரிய சொத்து ராமர் கோயிலாக இருந்திக்கவில்லை, கள்ளத்தனமாகவே விக்கிரகங்கள் உள்ளே வைக்கப்பட்டன என்று நீதிபதிக்கு முன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.** ஆனால் பைஸாபாத் சிவில் நீதிமன்ற நீதிபதி N.N. சத்தர் கோபால் சிங்கின் கோரிக்கைகளை ஏற்று சிலையை அப்புறப்படுத்தக்கூடாது என்று இடைக்காலத் தடை உத்திரவு பிறப்பித்தார். இதுபின் 1951இல் சிவில் நீதிபதியால் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. இதன் பின்னரும் வழக்குகள் தொடர்ந்தன.

அலகாபாத் உயர்நீதிமன்றம்

1961ஆம் ஆண்டு இந்த வழக்குகள் அனைத்தும் அலஹாபாத் உயர்நீதிமன்றத்தில் லக்னோ பெஞ்சின் முன் வழக்கு எண் 12, 1961 ஆக விசாரணைக்கு கொண்டு வரப்பட்டது. உயர்நீதிமன்றத்தில் இவ்வழக்கு இருந்து வரும் வேளையில் விஸ்வஹிந்து பரிசத் வேறு முயற்சிகளில் இறங்கியது.

ஜனக்பூரி 1984 செப்டம்பர் 25

சீதாதேவி பிறந்ததாகக் கூறப்படும் நேப்பாளத்திலுள்ள ஜனக் பூரியிலிருந்து 1984 செப்டம்பர் 25ஆம் நாள் துவங்கி அயோத்திவரை ராம ஜென்மபூமி மீட்பு ரத யாத்திரையை விஸ்வஹிந்து பரிஷத் நடத்தியது.

அயோத்தி 1984 அக்டோபர் 7

ரதயாத்திரையின் இறுதியில் 1984 அக்டோபர் 7இல் அயோத்தியில் கூடினர். பாபரி மஸ்ஜித்தில் நுழைந்து அதன் பூட்டை உடைத்து அதனை முழுக் கோயிலாக மாற்ற உறுதியெடுத்தனர். 'ராமஜென்பூமி நடவடிக்கைகுழு' தாலா – கோலோ' பூட்டை உடைக்கும் போராட்டமும் அன்றைய தினம் துவக்கப்பட்டது.

இந்திரா படுகொலை

1984 அக்டோபர் 31இல் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி கொல்லப்பட்டதால் போராட்டத்தை குழுவினர் தற்காலிகமாக ஒத்திவைத்தனர். விஸ்வஹிந்துபரிஷத் 1985 அக்டோபர் 23இல் மீண்டும் 'பூட்டை உடை' என்ற போராட்டத்தை நாடெங்கும் 25 இடங்களில் நடத்தியது. 1986 மார்ச் 9க்குள் பாபரி மஸ்ஜித் கதவுகளை திறந்து விடாவிட்டால் தடையை மீறி பூட்டை உடைத்து மஸ்ஜிதிற்குள் செல்லவும் விசுவ ஹிந்து பரிஷத் முடிவெடுத்தது.

18-12-1985

முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதிகளான விஸ்வஹிந்து பரிஷத் தலைவர்கள் S.N.கத்திவு, B.N. அகர்வால், ஒய்வுபெற்ற காவல்துறை ஐ.ஜி, S.C.தீட்சித் ஆகியோர் 18–12–1985இல் பைஸாபாத் மாவட்ட நீதிபதி இந்துகுமார் பாண்டையே வீட்டில் சென்று சந்தித்தார்கள். பாபர் மஸ்ஜிதை (கோயிலை) பூட்டி வைத்திருப்பது சட்ட விரோதம் என்று அவரிடம் தெரிவித்தார்கள்.

25-1-1986

அயோத்தியைச் சேர்ந்த உமேஷ் சந்தர் பாண்டே என்ற வழக்கறிஞர் (விசுவஹிந்து பரிசத்தின் ஆதரவாளர்) முனிசீப் நீதிமன்றத்தில் 25–1–1986இல் ராமரை பூஜிக்க உள்ள தடைகளை அகற்ற வேண்டுமென்று மனுத் தாக்கல் செய்தார்.

28-1-1986

சடர் முனிசீப் ஹரிசங்கர்துபே 28–1–1986இல் இம்மனுவை நிராகரித்தார். 1950இல் தொடுக்கப்பட்ட இவ்வழக்கு அலகபாத் உயர்நீதிமன்றத்தில் இப்போது இருப்பதால் என்னால் எந்த உத்திரவையும் பிறப்பிக்க இயலாது என்று தீர்ப்பளித்தார்.

31-1-1986

முன்சீப் அளித்த தீர்ப்பை எதிர்த்து மாவட்டநீதிபதியின் முன் 31–1–1986 அன்று மேல்முறையீடு (Appeal) மனு தாக்கல் செய்யப்பட்டது.

ஒரே நாளில் தீர்ப்பு : கே.எம். பாண்டே

13, 178 நாட்கள் பூட்டப்பட்டிருந்த பாபர்மஸ்ஜிதின் பூட்டு விஷயத்தை 31–1–1986இல் விசாரித்த நீதிபதி கே.எம். பாண்டே, ஒரேநாளில் அதாவது 1–2–1986 மாலை 4.40 மணிக்கு பூட்டைத் திறந்து விட உத்திரவிட்டார். தீர்ப்பு வழங்கிய 40 நிமிடங்களில் அதாவது 1–2–1986 மாலை 5.20 மணிக்கு பாபரி மஸ்ஜிதின் பூட்டு உடைக்கப்பட்டு முழுமையான கோயிலாக மாற்றப்பட்டது. உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்பாராமல் திறந்தும் விடப்பட்டது.

ஜனவரி 1989

அலஹாபாத்தில் 1989 ஜனவரியில் நடைபெற்ற 'விராத் சாந்த்' சம்மேளனத்தில் ராமருக்கு அயோத்தியில் ஆலயம் எழுப்ப நான்கு கட்ட நடவடிக்கைக்கு திட்டம் தீட்டப்பட்டது. இந்தத் திட்டம் 1989 செப்டம்பர் 30இல் துவங்கிடவும் நவம்பர் 9, 1989 அன்று அயோத்தியில் பாபரி மஸ்ஜித் வளாகத்தில் 25 கோடி ரூபாய் செலவில் கோவில் கட்ட அடிக்கல் நாட்டவும் திட்டமிடப்பட்டது.

நவம்பர் 6, 1989

இந்நிலையில் உ.பி. அரசு அலஹபாத் உயர்நீதிமன்றத்தில் விசுவஹிந்து பரிசத் அடிக்கல் நாட்ட தேர்ந்தெடுத்துள்ள இடம் சர்ச்சைக்குரியதா? என்று விளக்கம் கேட்டு மனு ஒன்றைத் தாக்கல் செய்தது.

1989 நவம்பர் 7

அலஹாபாத் உயர்நீதிமன்ற நீதிபதிகள் இம்மனுவை விசாரித்தனர், அடிக்கல் நாட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் சர்ச்சைக்குரியது தான் என்றும், கட்டடம் நிற்கும் இடம் மட்டுமில்லாமல், பிளாட் எண் 586 உட்பட 23 பிளாட்கள் சர்ச்சைக்குரியவை என்றும் தீர்ப்பளித்தனர். அதோடு, **இந்த அனைத்து இடங்களிலும் உள்ளது உள்ளபடியே இருக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டனர்.** *'The order of status quo extended not only to the structures, but also to the open piece of land adjoining the structure'* என்று தீர்ப்பில் கூறியிருந்தார்கள்.

ஆனால் இவைகளை எல்லாம் மீறி 1989 நவம்பர் 9இல் விஸ்வஹிந்து பரிஷத் உயர்நீதிமன்றம் தடை செய்த இடத்தில், கோயிலுக்கான அடிக்கல்லை நாட்டியது.

11-11-1989 - காவிக் கொடியிடம் தேசியக் கொடி சரண்

டெல்லியிலிருந்து வெளிவரும் ஸ்டேட்ஸ்மென் பத்திரிகை நிருபர் பத்தினரனா 'அயோத்தியில் இந்திய அரசு மண்டியிட்டது. காங்கிரஸ் கொடியும். தேசிய மூவண்ணக் கொடியும், காவிக் கொடியிடம் தன்மானமின்றி சரண் அடைந்தன' என்று அது குறித்து அப்போது எழுதினார்.

23-2- 1990

1989 நவம்பர் 9இல் அடிக்கல் நாட்டிய இடத்திற்கு அருகில் விசுவஹிந்துபரிஷத் அலுவலகம் ஒன்றைத் திறந்தது. பரிஷத் செயலாளர் அசோக் சிங்லால் 23-2-1990இல் பத்திரிகையாளர்களிடம், 'சிலை வடிக்கும் பணியும், கோவிலுக்கான சிற்ப பணிகளும் துவங்கப்படும்' என்று அறிவித்தார்.

24-9-90

இன்றைய உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி இராமர் கோயில் கட்ட சோமநாதபுரத்திலிருந்து 24-9-1990இல் இராம இரதயாத்திரையைத் தொடங்கினார். (பட்டினி இந்தியாவில் பாபர் மசூதியும் இராமர் கோயிலும், பேராசிரியர் கார்த்தி, 1992, பக் 116)

இந்த ரதயாத்திரையின் போது நடைபெற்ற வகுப்புக் கலவரங்களால் ஆயிரக்கணக்கில் அப்பாவிகள் உயிர் துறந்தனர். ரதயாத்திரையைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்தன.

வி.பி.சிங்

1984ஆம் ஆண்டு இந்தியப் பாராளுமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் இரண்டு இடங்களைப் பெற்றிருந்தது பாரதீய ஜனதா. 1989ஆம் ஆண்டுத் தேர்தலில், தேசிய முன்னணியில் அங்கம்வகித்த பாரதீய ஜனதா, சமூகநீதிக் காவலர் வி.பி. சிங்குடன் கூட்டணி வைத்து போட்டியிட்டு, 80 இடங்களில் வெற்றி பெற்றது.

17-1-1990

அத்வானியின் ரத யாத்திரையை தடைசெய்தால் வி.பி. சிங் அரசிற்கு அளித்து வரும் ஆதரவை வாபஸ் பெறுவோம் என பி.ஜே.பி. அறிவித்தது.

முலாயம்சிங் யாதவ்

அப்போது உத்திரப்பிரதேசத்தில் முலாயம்சிங் யாதவ் ஆட்சியும், பீகாரில் லல்லு பிரசாத் யாதவ்வின் ஆட்சியும் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

23-10-1990

எல்.கே.அத்வானியும் அவருடைய பரிவாரங்களும் உத்திரப் பிரதேசத்திற்குள் நுழைந்து கலவரங்களை உருவாக்கிடக் கூடும் என்று உ.பி. அரசு முடிவெடுத்தது. எல்.கே. அத்வானியின் ரதயாத்திரை பீகாரில் சமஸ்திப்பூர் வந்தபோது 23–10–1990 அன்று கைது செய்யப்பட அத்வானி, அரசு விருந்தினர் மாளிகையில் காவலில் வைக்கப்பட்டார். முலாயம் சிங் யாதவின் அரசு உறுதியாக நடவடிக்கை எடுத்தது.

30-10-1990

பாபரி மஸ்ஜித் வளாகத்தில் ஹிந்து முன்னணியினர் தங்களது கலக வேலைகளைச் செய்தனர். 3 லட்சம் கரசேவர்கள் சென்றனர். **'ராம் லலா ஹம் ஆகயே மந்திர் யஹீம் பனா யேங்கே'** (ராம ராமா நாங்கள் வந்துவிட்டோம் இதே இடத்தில் உனக்குக் கோயில் கட்டுவோம்) என்று முழக்கமிட்டனர்.

வளாகத்தில் காவிக் கொடிகள் ஏற்றப்பட்டன; முலாயம்சிங் யாதவ் பறந்து சென்ற ஹெலிகாப்டரை நோக்கி லட்சக்கணக்கில் செருப்புகள் வீசப்பட்டன. பாபர் மஸ்ஜிதின் சுவர்கள் பெரும்பகுதி நொறுக்கப்பட்டன. (அயோத்தியில் இமாலய சாதனை 1991, பக் 15,16)

பள்ளிவாசலின் சுவர்கள் இடிந்தன. வி.பி.சிங் அரசு பதவி இழந்தது. இதற்கு இடையில் சந்திரசேகர் அரசு வந்து போனது.

1991 தேர்தல்கள்

1991இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பி.ஜே.பி 80 உறுப்பினர்கள் என்ற நிலையிலிருந்து 117 உறுப்பினர்கள் என்ற நிலைக்கு உயர்ந்தது, உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஹிமாச்சலப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களிலும் பி.ஜே.பி. ஆட்சிக்கும் வந்தது.

மத்தியில் இந்திரா காங்கிரசின் சார்பில் பி.வி. நரசிம்மராவ் பிரதமரானார். 32% வாக்குகளைப் பெற்றிருந்தப் பாரதீய ஜனதா கட்சி, உத்திரப்பிரதேசத்தில் 24–6–1991இல் கல்யாண்சிங் தலைமையில் அரசு அமைத்தது.

வழிபாட்டுத் தலங்களின் சட்டம்

பிரதமர் பி.வி. நரசிம்மராவ் 1991 செப்டம்பரில் ஓர் சிறப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார். (Places of worship Special Provisions ACT) இதன்படி எந்தப் பள்ளிவாசலும் ஆலயமாகவோ, கோயிலாகவோ மாற்றப்படலாகாது என்றும், அதுபோல் எந்தக் கோயிலும் ஆலயமாகவோ பள்ளிவாசலாகவோ மாற்றப்படமுடியாது என்று அது கூறியது. ஆனால் பாபரி பள்ளிவாசலை மட்டும் இது கட்டுப்படுத்தாது என்றது அந்தச் சட்டம்.

1991 செப்டம்பர் – அக்டோபர்

இந்த நிலையில் அயோத்தியில் பாபரி மஸ்ஜித் வளாகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் 277 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த உ.பி. அரசு கேட்டது. நீதிமன்றம் அக்கோரிக்கையை ஏற்றுக் கொண்டது. அதன் சுற்றுப்புறங்களையும் இருக்கும் நிலையிலேயே பாதுகாக்க வேண்டும் என்ற உத்திரவை மதிக்காமல் உபி. அரசு அங்கிருந்த ஒன்பது சிறு கட்டிடங்களை இடித்துத் தள்ளியது. சக்திகோபால் கோவில் பகுதிகள் சுமித்ராபவன், அனைத்துக் கடைகள் கோனபால் பவன், லோபாஸ் ஆஸ்ரமம், அபிராம் தாஸ் மண்டபம், காவல்நிலைய சிற்றுண்டிச் சாலை, பல குடிசைகள், சங்கத் மோகன் கோவில், தற்காலிகக் கூடாரங்கள் போன்றவை இடித்துத் தள்ளப்பட்டது.

17-10-1991

12–10–1991 முதல் உத்திரபிரதேச அரசுக்குச் சொந்தமான 2.774 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்திய ஆணை செல்லாது என்று அறிவிக்கக்கோரி 17–10–1991இல் அலகபாத் உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது.

22-10-1991

இராமர் கோயிலைக் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் பணி 22–10–1991இல் நடைபெற்றது. பிரதமர் பி.வி. நரசிம்மராவ் அரசு இதனை அப்போதும் வேடிக்கைப்பார்த்துக் கொண்டிருந்தது.

25-10-1991

அலகாபத் உயர்நீதிமன்றம் "அயோத்தியில் அரசு கையகப்படுத்திய இடங்களையும் அதன் சுற்றுப்புறங்களையும் இருக்கும் நிலையிலேயே பாதுகாக்க வேண்டும்" என்று 25–10–1991இல் உத்திரவிட்டது. ஆனால் உ.பி. அரசு அந்த உத்திரவை மதித்திடவில்லை. அங்கிருந்த சிறு சிறு கட்டிடங்கள் இடித்துத் தள்ளப்பட்டன. இதன் உள் நோக்கம் பாபரி மஸ்ஜிதையும் இடித்துவிட்டு இராமர் கோயிலை அங்கு எழுப்ப வேண்டும் என்ற உணர்வுதான் என்பதனைச் சொல்லாமலேயே விளங்கிக் கொள்ளலாம்.

30-10-1991

கடந்த ஆண்டில் கரசேவை செய்த தொண்டர்களைப் பாராட்டியும், இந்த ஆண்டும் அதுபோல கொடிகளை ஏற்றியும் கோஷங்களை முழக்கியும் விஸ்வஹிந்துபரிஷத்தினர் பாபரி மஸ்ஜிதில் கூடினர். காவிக் கொடிகளையும் ஏற்றினர்.

11-12-1991

பாரதீய ஜனதாகட்சியின் தலைவர் முரளிமனோகர் ஜோஷி டிசம்பர் 11 1991இல் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை 'ஏக்தாயாத்ரா' பயணத்தை மேற்கொண்டார். இதன் தொடக்கவிழாவில் திரு. எல்.கே. அத்வானி (இன்றைய உள்துறை அமைச்சர்) துக்ளக் சோ மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

8-2-1992

பாபரி மஸ்ஜித் பகுதியில் உ.பி. அரசு கையகப்படுத்திய இடத்தில் 8–2–1992இல் தடுப்புச் சுவரை எழுப்பியது.

22-3-1992

'இராமர் கதை சொல்லும் பூங்கா அமைத்திட பயன்படுத்தப்படும்' என்று சொல்லி 42 ஏக்கர் நிலத்தை இராமஜன்பூமி அறக்கட்டளைக்கு உ.பி. அரசு குத்தகைக்கு வழங்கியது. அதன்படி 22–3–1992இல் அங்குள்ள சிறுசிறுகட்டிட்ங்கள் அனைத்தும் தூள்தூளாக்கப்பட்டது. பூங்கா அமைக்கும் பணி என்ற பெயரால் மோசடிகள் தொடர்ந்தன.

7-4-1992

இதுகுறித்து நாடாளுமன்றத்தில் பெரும் பிரச்சினை எழுந்தது. ஜனதா தளத்தலைவர் S.R. பொம்மை தலைமையில் மற்றும் 35 உறுப்பினர்கள் கொண்டகுழு அயோத்திக்குச் சென்றது '**பாபரி மஸ்ஜித் வளாகத்தில் நீதிமன்ற ஆணைகளும், நீதிநெறிகளும் தொடர்ந்து மீறப்பட்டிருக்கின்றன**' என்று அது தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.

ஆனால் மத்திய அரசோ, மாநில அரசோ எந்த நடவடிக்கையும் அந்த அறிக்கையின் பேரில் அப்போது எடுக்கவில்லை என்பதனை நாடு மறக்கவில்லை.

9-7-1992

பாபர் மஸ்ஜித் வளாகத்தில் கையகப்படுத்திய 2.774 ஏக்கர் நிலத்தில் கட்டுமானப்பணிகள் துவங்கின.

15-7-1992

அலகபாத் நீதிமன்றம் உடனே இதை நிறுத்திட ஆணையை பிறப்பித்தது. அதற்கும் அரசு செவி சாய்க்கவில்லை.

22-7-1992

சுப்ரீம் கோர்ட் 22–7–1992இல் கட்டுமானப்பணிகளை நிறுத்திட வேண்டும் என்ற ஆணையை பிறப்பித்தது.

23-7-1992

உ.பி. பாரதீய ஜனதா முதல்வர் கல்யாண்சிங் உச்சநீதிமன்றத்தில், இனி நீதிமன்றத்தின் ஆணைகளுக்கு நிபந்தனைகளின்றி அடிபணிந்திட சித்தமாய் இருப்பதாக அறிவித்தார். (குலாம் முஹம்மது, பாபரி மஸ்ஜித் அடிப்படைத் தகவல்கள், பாகம் 1, 1999, பக்.23)

30, 31-10-1992

விஸ்வஹிந்து பரிஷத்தின் சாதுக்கள்(?) டெல்லியில் கூடி, நீதிமன்ற ஆணைகளைப் பற்றிக் கவலைப்படாமல் டிசம்பர் 6, 1992 முதல் அயோத்தியில் கரசேவை துவங்கும் என்று அறிவித்தனர். பாபர் மஸ்ஜித்தின் மத்திய மூன்று பிரம்மாண்மான 'டும்' பகுதியிலிருந்து அது துவங்கும் என்றும் அறிவித்தனர்.

1992 நவம்பர்

உடனே, உச்சநீதிமன்றம் உ.பி. அரசுக்கு, பள்ளிவாசல் வளாகத்தில் கட்டுமானப்பணிகளை எப்படி அரசு தடுக்கப்போகிறது? என்று எழுத்து மூலம் பதில் தர வேண்டும் என்று கேட்டது.

கறுப்பு தினம் 6-12-1992

வரலாற்றில் கறுப்பு தினமான டிசம்பர் 6, 1992இல் ஞாயிறு அன்று காலை 11 மணியளவில் துவங்கி மாலை 6 மணிக்குள் பாபரி மஸ்ஜித்தின் மூன்று பிரதான 'டும்'களும் முழுமையாக இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது.

8-12-1992

கரம் என்றால் கை; சேவை என்றால் பணி அல்லது தொண்டு. கையால் செய்கிற தொண்டு. அதாவது தானாகவே முன் வந்து, கூலி வாங்காமல், எங்களது உழைப்பை வழங்கி, நாங்களே பணியாற்றுகிறோம் என்பதற்கு கரசேவை என்று பெயர். டிசம்பர் 6, 1992இல் அயோத்தியில் கரசேவை செய்தவர்கள் அதாவது பாபரி மஸ்ஜிதை இடித்துத் தகர்த்தவர்கள் அனைவரும் 8–2–1992இல் மத்திய அரசின் செலவில் இலவசமாகவே அவரவர் இல்லங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

குடியரசுத் தலைவர் ஆட்சி

ஏற்கனவே திட்டமிட்டபடி பாபரி மஸ்ஜித் முழுமையாக இடித்துத்தள்ளப்பட்டதற்குப் பின்னர் 1992 டிசம்பர் 6 மாலையில் உ.பி. முதல்வர் கல்யாண்சிங் தனது பதவியை ராஜினாமாச் செய்தார். அதைத் தொடர்ந்து திரு. எல்.கே. அத்வானி அவரது நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார்.

குடியரசுத்தலைவர் ஆட்சி அமுல்படுத்தப்பட்டது. இடிக்கப்பட்ட கட்டிடம் மீண்டும் கட்டப்பட "**டிசம்பர் 6ஆம் தேதியன்று நடந்த சம்பவங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறிய பல்வேறு அதிகாரிகள் அனைவர்மீதும் தேவைப்பட்டால் குற்றவியல் நடவடிக்கை உட்பட, ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது இடிக்கப்பட்ட கட்டிடம் மீண்டும் கட்டப்பட தேவையான நடவடிக்கைகளை அரசு எடுப்பது என்று அயோத்தியாவில் முதல் கட்ட நடவடிக்கையாக மேற்கொள்ள வேண்டிய செயல்**' என்று மத்திய அரசு அறிவித்தது. (அயோத்தியா பற்றிய முழு விவர அறிக்கை, முழுமைக் கண்ணோட்டம், இந்திய அரசின் உள்துறை அமைச்சக வெளியீடு மார்ச் 1995, பக் 17)

ஜனவரி 1993

அலகபாத் உயர் நீதிமன்றம் பாபரி பள்ளிவாசல் இடிபாடுகளின் மீது கட்டப்பட்ட 'மினி' இராமர் கோயிலை பக்தர்கள் தரிசிக்க (தர்ஷன்) அனுமதி அளித்தது.

7-1-1993

இந்தியக் குடியரசுத்தலைவர் அயோத்திப் பிரச்சினை குறித்த ஓர் அவரச சட்டத்தைப் பிரகடனப் படுத்தினார்.

S.B. சவாண்

இந்திய அரசின் உள்துறை அமைச்சர் S.B. சவாண் இந்தியக் குடியரசுத் தலைவர் பிறப்பித்த அவசரச் சட்டத்தை, முறையாக சட்டமாக்கிட நாடாளுமன்றத்தில் ஓர் பிரேரணையைத் தாக்கல் செய்தார். அப்போது, "இந்திய மக்களிடையே மதநல்லிணக்கத்தையும் பொதுவான சகோரத்துவ மனப்பான்மையையும் ஏற்படுத்திட வேண்டிய அவசியம் இருப்பதால், சர்ச்சைக்குரிய கட்டிடம் அமைந்துள்ள நிலத்தையும், அதனைச் சுற்றியுள்ள பொருத்தமான நிலங்களையும் மத்திய அரசு பொது நலன் கருதி கையகப்படுத்திட இந்த இடங்கள் தேவையெனக் கருதப்பட்டது. இந்த இடங்கள் திட்டமிடப்பட்ட முறையில் ஒரு ராமர் கோயிலும், ஒரு பள்ளிவாசலும் அங்கே வரும் யாத்திரிகர்களின் சௌகரியங்களுக்கான வசதிகளையும், ஒரு நூலகத்தையும், அருங்காட்சியத்தையும் இன்னும் பிற பொருத்தமான வசதிகளையும் செய்து அந்த இடத்தை மேம்படுத்தலாம் என்று கருதப்பட்டதால் மத்தியஅரசு, அயோத்தியில் பாபரி மஸ்ஜித் அமைத்திருந்ததைச் சுற்றியுள்ள இடங்களையும் விஷ்வஹிந்து பரிஷத்திடமிருந்து ஆர்ஜிதப்படுத்திக் கொண்டது" என்று அறிவித்தார்.

உச்சநீதிமன்றத்திடம் குடியரசுத் தலைவர் கேள்வி

சர்ச்சைக்குரிய இடத்தில் பாபரி மசூதி கட்டப்படுவதற்கு முன்னர் ஒரு ஹிந்து கோயிலோ, அல்லது ஹிந்து சமயக்கட்டிடமோ அந்த இடத்தில் இருந்ததா? என்பதனை அறிவிக்குமாறு பிரிவு 143 இன் கீழ் குடியரசுத்லைவர் உச்சநீதி மன்றத்தைக் கேட்டார்.

இந்திய அரசியல் சட்டம் பிரிவு 143 (1), (2)ன் படி உச்சநீதிமன்றத்திடம் குடியரசுத் தலைவர் கேட்டதிற்கு, இப்பிரச்சினை குறித்து கருத்து எதுவும் கூறிட முடியாது என்று உச்சநீதிமன்றம் அறிவித்தது. ஆனால், மத்திய அரசாங்கம் நிறைவேற்றிய அயோத்திச் சட்டம் செல்லும் என்றும் தீர்ப்பளித்தது.

ஐவரில் மூவர்

உச்சநீதிமன்றத்தில் ஐவர் கொண்ட பெஞ்ச்சில் நீதிபதிகள் M.N. வெங்கடாசலய்யா, J.S. வர்மா, G.N. ராய் ஆகிய மூவர் மத்திய அரசாங்கத்தின் 1993ஆம் ஆண்டைய அயோத்திச் சட்டம் செல்லும் என்று தீர்ப்பளித்தனர். ஆனால் இந்தச் சட்டத்தின் 4வது பிரிவில் உட்பிரிவு 3ஐ அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. (அதாவது சர்ச்சைக்குரிய நிலத்தைப் பற்றிய வழக்குகள் வேறு எந்த நீதிமன்றத்தில் இருந்தாலும் அந்த வழக்குகள் தள்ளுபடி செய்யப்படுகின்றன என்பதனை சுப்ரீம் கோர்ட் ஏற்கவில்லை).

'அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறும்; அது தீர்ப்புச் சொல்லும், எனவே தனியாக சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு சொல்ல வேண்டியதில்லை' என்றும் தீர்ப்பளித்தது.

சட்டம் செல்லாது

சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் **A.M. அஹமது, S.P. பரூச்சா** (S.P. Bharucha) (இவர் இப்போது சுப்ரீம் கோர்ட்டின் தலைமை நீதிபதியாவார்) ஆகிய இரு நீதிபதிகளும், அரசின் அந்தச் சட்டம் செல்லாது என்று தீர்ப்பளித்தனர்.

1994

பெரும்பான்மை நீதிபதிகள் சுப்ரீம் கோர்ட்டில் 1994இல் அளித்த தீர்ப்பின்படி தான் ஹிந்துத்துவ சக்திகளுக்கு எதிர்ப்பாகவும், சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பாகவும் அந்தத் தீர்ப்பு இன்றுவரை இருந்து வருகிறது. 7–1–1993 தேதியிலிருந்த நிலைமை நீடிக்க வேண்டும் என்ற நிலையும் இருந்து வருகிறது.

சட்டத்தின் 6(1) விதி

'சர்ச்சைக்குரிய இடத்தில், மத்திய அரசு கையகப்படுத்தியுள்ள நிலத்தை, உரிய விதிமுறைகளை ஒத்துக்கொண்டு அதன்படி நடக்கக்கூடிய ஒருஅமைப்பு என்று மத்திய அரசு கருதுமானால், அப்படிப்பட்ட நிலையில், மத்திய அரசு கையகப்படுத்திவைத்துள்ள சர்ச்சைக்கு அப்பாற்பட்ட இடத்தை அந்த அமைப்பிடம் மத்திய அரசு வழங்கலாம் என்று கூறுகிறது'. இந்த அடிப்படையில்தான் இப்போது விஸ்வஹிந்து பரிஷத் அயோத்தியில் அந்த இடத்தை மத்திய அரசிடம் கேட்கிறது.

ஆலயம் அமைப்போம்

'ஸ்ரீ ராமர் பிறந்த பூமியை கோர்ட் முடிவு செய்ய முடியாது என்பது நமது ஆணித்தரமான முடிவு' (ஆர்த்தெழுந்திடுவோம், அயோத்தி நகரில் ஆலயம் அமைப்போம், ஆர்.பி.வி.எஸ். மணியன் எழுதிய நூல் பக்.94)

கல்யாண்சிங்

'நான் திட்டவட்டமாக கூறுகிறேன் ராமஜென்மபூமி பிரச்சினை நீதிமன்றத்திற்கு அப்பாற்பட்டது' உ.பி. முன்னாள் முதல்வர் கல்யாண்சிங் சண்டே வார இதழுக்கு அளித்த பேட்டி 29-3-1992)

ஏப்ரல் 24, 1992இல் பிரண்ட்லைன் பத்திரிகைக்கு பஜ்ரங்தள் தலைவர் வினாய் கட்டியார் **'பலம் தான் எனக்குத் தெரிந்த ஒரே சட்டம். பலம் மேலோங்கும் போது சட்டம் அமைதியாகிவிடும்'** என்று பேட்டியளித்துள்ளார்.

அசோக் சிங்கால் - ஆகஸ்ட் 28, 1992

பிரண்ட்லைன் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் விசுவ ஹிந்துபரிஷத் தலைவர் அசோக்சிங்லால் **'இந்தப் பிரச்சினையில் நீதிமன்றத்தின் தீர்ப்புகள் அரசாங்கத்தைத்தான் கட்டுப்படுத்துமே தவிர எங்களைக் கட்டுப்படுத்தாது'** என்று கூறியிருக்கிறார். இப்போதும் அவ்வாறே சொல்லி வருகின்றார்கள்.

ஆக, நீதிமன்றத் தீர்ப்புக்களை இவர்கள் ஏற்றுக் கொள்ளவார்களா? என்பதில் அவர்கள் தந்துள்ள முந்தையப் பேட்டிகளே உண்மைக்குச் சான்றாக இருந்து வருகின்றது.

1997 பிப்ரவரி

அரசு கையகப்படுத்திய பாபரி பள்ளிவாசல் நிலத்தை மேற்பார்வையிடும் பொறுப்பேற்றிருந்த அமிதாப் ஸ்ரீவத்ஸவர் (பைஸாபாத்காரர்) கொல்லப்படுகிறார் அல்லது மரணமடைந்து விடுகிறார்.

1998 மே

அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்படும் அபாயம் பற்றி தேசியத் தலைவர்கள் அச்சம் தெரிவிக்கின்றார்கள். நாடெங்கும் நாட்டின் நலன் கருதி குரல்கள் ஒலித்தன. பிரச்சினைக்கு முடிவுவந்தபாடில்லை. 1993ஆம் ஆண்டின் மத்திய அரசின் அயோத்திச் சட்டம் பிரிவு 7(2) சொல்வது என்ன?

பிரிவு 7(2)

"மத்திய அரசோ, மத்திய அரசால் அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரு நபரோ, அமைப்போ இந்த சட்டம் உருவாக்கப்படுவதற்கு முன்பாக இருந்த நிலைமை அப்படியே இருக்க வேண்டும் என்பதனை உறுதி செய்ய வேண்டும்". (*Which requires that in Managing the property vested in the centre the government or a person authorised by it shall ensure that the position authrised by it shall ensure that the position existing before the commencement of this Act is manitained in the Area)*

நேர்விரோதமானது

'கோவில் கட்டும் பணியில் தொடர்ந்து தாங்கள் ஈடுபடுவோம்' என்ற அறிவித்துள்ளது விசுவஹிந்துபரிஷத். இது 1993ஆம் ஆண்டின் அயோத்தி சட்டம் பிரிவு 7 (2)க்கு நேர் விரோதமானது. மத்தியஅரசு இந்த இடத்தை அவர்களிடம் வழங்கினால் உடனே சந்தேகமின்றி கோவில் கட்ட ஆரம்பிப்பார்கள் பிறகு நீதிமன்றத்தில் தீர்ப்பு வருகிற போது இச்செயலானது அதன் முடிவிற்கு அர்த்தம் இல்லாமல் ஆக்கிவிடும். அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்நோக்கி அகிலம் காத்திருக்கிறது.

22.02.2002 ஹிந்து இதழ்

ஆனால் அதற்கிடையில் விசுவ ஹிந்து பரிஷத்தின் கோரிக்கையினைப் பரிசீலிக்கப் போவதாக பிரதமர் வாஜ்பாய் அறிவித்துள்ளார். அதனை 22-2-2002 இந்து நாளிதழ் தலையங்கம் மிகவும் வன்மையாகக் கண்டித்துள்ளது. **'பிரதமரின் அறிவிப்பு குறுகிய வட்டத்திற்குள்ளிலிருந்து எழும் ஒரு சார்புடைய கருத்தானது என்று குறிப்பிட்டுள்ளது. அத்தோடு பிரதமர் இப்படி பொறுப்பற்று பேசுவது அழகல்ல என்ற வார்த்தைகளில் கண்டிப்பது மட்டும் போதுமானதல்ல'** என்றும் கூறியுள்ளது.

மார்ச்1, 2002ல் வெளிவந்த பிரன்ட்லைன் பத்திரிகையில் இதுபற்றி 19 பக்கங்களில் விரிவாகவே கட்டுரைகள் வந்துள்ளன. வி.எச்.பி.யின் சட்டவிரோதச் செயலுக்கு ஊக்கமளிக்கக்கூடாது என்று குல்தீப் நய்யார் ஆதாரங்களுடன் விளக்கி கட்டுரை எழுதியுள்ளார்.

1949 முதல் 1992 வரையில் ஒவ்வொரு கட்டத்திலும் ராமர் கோயில் தொடர்பாக மத விஷயங்கள் சம்பந்தமாக, நீதிமன்றத்தை அணுகியவர்கள் விஷ்வஇந்துபரிஷத்காரர்கள். இப்போது மட்டும் மதவிஷயங்களில்

தலையிட நீதிமன்றத்துக்கு உரிமை இல்லை என்கிறார்கள். இவர்கள் ஒருபோதும் நாணயமானவர்களாக, நேர்மையானவர்களாக, இவர்கள் கூறும் கடவுளுக்குப் பயந்தவர்களாக இருந்ததில்லை. இப்போது நாணயம் கெட்ட தன்மையே பேசுகிறார்கள் என்பது தவிர வேறு என்ன? என்று சின்னக்குத்தூசி நக்கீரன் இதழ் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

நான்கு வழக்குகள்

பாபரி மஸ்ஜித் சம்பந்தமாக அலகபாத் உயர்நீதிமன்றத்தில் **005 no 4/1989, 00SNo 1/89, 00S No 3/89, ooS No: 5/89** ஆகிய நான்கு வழக்குகள் லக்னோவில் அலஹாபாத் உயர்நீதிமன்றத்தின் சிறப்பு பெஞ்சின் முன்னிலையில் நிலுவையில் உள்ளன. இந்த 4 வழக்குகளும் நீதிமன்றத்தில் வழக்காடப் படுகின்றன.

சிறப்பு நீதிமன்றம்

எல்.கே. அத்வானி, முரளிமனோகர் ஜோஷி போன்றவர்கள் மீது 1992 டிசம்பர் 6இல் பாபர் மஸ்ஜித் இடித்துத் தள்ளப்பட்டதற்குப் பிறகு இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன குற்றம் 197/1992, 198/1992.

இந்த வழக்குகள் சிறப்பு நீதிமன்றத்தில் நடந்துவருகின்றன. இந்த இரு வழக்குகளும் மத்தியப்புலனாய்வுத் துறைக்கு (CBI) மாற்றப்பட்டது. உயர்நீதிமன்ற வழக்குகள் சிறப்புநீதிமன்றத்தில் நடக்க வேண்டுமானால், உயர்நீதிமன்றத்தின் ஒப்புதல் (Concurrence) வாங்க வேண்டும். ஆனால் சி.பி.ஐ. 198/92 வழக்கிற்கு உயர்நீதிமன்றத்தின் ஒப்புதல் வாங்காமலேயே சிறப்பு நீதிமன்றத்திற்கு வழக்கைக் கொண்டு வந்தது. எனவே அந்த வழக்கை அதனைக் காரணம் காட்டி சிறப்பு நீதிமன்றம் விசாரிக்கவில்லை.

21-5-2001

பிரபலபத்திரிகையாளர் குல்தீப் நய்யார் மற்றும் நான்குபேர் இது குறித்து உயர் நீதிமன்றத்தின் உதவியை நாடினார்கள். இவ்வழக்கை ஏற்றுக் கொள்ளாத நிலையிலும், நாங்கள் உயர்நிதிமன்றம், மத்திய புலனாய்வுத்துறை முறையான நெறிமுறைகளைப் பின்பற்றி மீண்டும் வழக்கைப் பதிவு செய்யும் என எதிர்பார்க்கின்றோம் என்று 21–5–2001இல் உயர்நீதி மன்றம் இது குறித்து சுட்டிக்காட்டியது என்கிறார் வழக்கறிஞர். ஸஃபர் யாப் ஜீலானி (பாபர் மஸ்ஜிதின் நடவடிக்கை குழு அமைப்பாளர்) L.K. அத்வானி முதலானவர்கள் மீது உள்ள வழக்கில் 198/92 முறையான நடவடிக்கைகளை எடுத்து அவர்களை நீதிமன்றத்தின் முன்னிறுத்த உ.பி அரசுக்கு ஆணையிட்டு, உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியது. இருந்தும் உ.பி. அரசு அசைவதாகத் தெரியவில்லை.

19-11-2001

உ.பி. அரசு அசையவில்லை எனவே திரும்பவும் குல்தீப் நய்யார் 19–11–2001இல் உச்சநீதிமன்றத்தில் சிறப்பு கவனஈர்ப்பு புகார் (Special Leave Petition) தாக்கல் செய்துள்ளார். மாநில அரசுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

4-1-2002

இந்த நிலையில் சர்ச்சைக்குரிய இடத்தைச் சுற்றியுள்ள சர்ச்சைக்கு உள்ளாகாத பகுதிகளில் நாங்கள் கோயிலைக் கட்டுவோம் யாரும் எங்களைத் தடுக்க இயலாது என்று விஸ்வ ஹிந்துபரிஷத் துணைத்தலைவர் கிரிராஜ் கிஷோர் அறிவித்துள்ளார்.

விஸ்வ ஹிந்து பரிஷத்தின் நடவடிக்கைகள் அயோத்தியில் தொடர்கின்றன. 'பூமி பூஜை', 'கட்டிடப் பணித்துவக்கம்', 'திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்டுள்ள சிற்பங்களைக் கொண்டு அயோத்தியில் ஒப்படைப்பது' என்ற அறிவிப்புகள் வந்துள்ளன. ஆளும் அரசுகள் அமைதி காக்கின்றன; அல்லது அவர்கள் விரும்பும் காரியங்களுக்கு திரை மறைவாக உதவிபுரிகின்றன.

இதற்குள் என்ன அவசரம்? மதவெறிசக்திகள் வேகவேகமாக மார்ச் 15 என்று கட்டியங் கூறுகின்றன. காஞ்சி காம கோடி பீடம் ஸ்ரீ ஜயேந்திரசரஸ்வதி சுவாமிகள் புதிய யோசனையைத் தெரிவித்துள்ளார். ஆலயம் கட்டும் பணி விரைவில் தொடங்கும் என்பதை உணர்த்துவதற்காக பூஜையைத் தொடங்க விரும்புகிறது. விஸ்வ ஹிந்துபரிஷத் ஏற்கனவே மார்ச் 15/2002 இல் ஆலயம் கட்டும்பணி தொட்ங்குமென்று அது அறிவித்திருப்பதால், தனது கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளவாவது அந்தத் தேதியில் பூஜை தொடங்கவேண்டும் என்று அது விரும்புகிறது (12–3–2001 தினமணி)

அயோத்தி குறித்து, அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளது. இந்த நிலையில் அயோத்தியில் என்ன நடைபெறப் போகிறதோ என்று மக்கள் அச்சத்துடன் எதிர்நோக்கியிருக்கிறார்கள்; நாட்டின் நலனில் அக்கரை கொண்டவர்கள் அமைதியையே, சுமூகமான தீர்வையே எதிர்பாக்கிறார்கள்.

உன் பூமியில்

இந்திய திருநாடே உன் பூமியில், இந்துக்களும், முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் இன்ன பிற மதத்தினரும் ஒற்றுமையுடன் வாழ வழி பிறக்காதா? என்று நல்லவர்கள் ஏங்கி நிற்கிறார்கள். காலங்காலமாக நடைபெற்று வரும் காரணந் தெரியாத கலவரங்களால், பலியாகும் அப்பாவி மக்களின் ஆயிரக்கணக்கான உயிர்கள் தொடர்ந்து மறையும் இழி செயல்கள் நிற்காதா? இறைவா! இந்த நாட்டையும், இந்த நாட்டு மக்களையும் காப்பாற்று! நல்வழிப்படுத்து! என்று யாசிக்கிறார்கள்.

வைகோ

இந்தியத் திருநாட்டை ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் மத்திய அரசாங்கத்தில் அங்கம் வகித்திடும் மறுமலர்ச்சி தி.மு.கழகப் பொதுச் செயலாளர், தமிழர் தலைவர் திருமிகு. வை.கோ. எம்.பி. 26–2–2002 அன்று தில்லியில் பிரதமர் வாஜ்பாய் கூட்டிய அணைத்துக்கட்சிக் கூட்டத்தில் ஆற்றிய உரை இதோ....

பிரதமர் வாஜ்பாய் அவர்கள் கூட்டியுள்ள இந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் மிக மிக முக்கியமான கூட்டமாகும். எரிமலையென வெடிக்கக் கூடிய அயோத்திப் பிரச்சினை இந்தியாவின் எதிர்காலத்தை ஒருமைப்பாட்டை பாதிக்கக் கூடிய பிரச்சினையின் மீது விவாதிக்கிற கூட்டமாகும்.

சமய ஒற்றுமையைப் பாதுகாத்தால் தான் நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாக்க முடியும். மார்ச் 15–ஆம் தேதிக்குப் பின் அயோத்தியில் இராமர் கோவில் கட்டப் போகிறோம் என்று விஸ்வ ஹிந்து பரிஷத் அறிவித்துள்ள நிலையில் பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தங்களை யாரும் தடுக்க முடியாது என்றும், அரசாங்கத்தின் அனுமதி தேவையில்லையென்றும், நீதிமன்றத்தின் தீர்ப்பு எதுவாயினும் தங்களைக் கட்டுப்படுத்தாது என்றும் ஆக்ரோஷமான அறிக்கைகளை விஸ்வ ஹிந்து பரிஷத் தொடர்ந்து தந்து கொண்டிருக்கிறது. கோவில் கட்டுவதற்கான நிலைகளையும், தூண்களையும் அயோத்திக்குக் கொண்டு போவோம் என்றும் பத்து இலட்சம் பேரைத் திரட்டப் போகிறோம் என்றும் கூறுவதோடு மட்டுமல்லாமல் அதற்கான ஏற்பாடுகளையும் மும்முரமாகச் செய்து வருகிறது.

1992–இல் பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு முன்பு எத்தகைய சூழ்நிலை அயோத்தியில் நிலவியதோ அதே சூழ்நிலை இன்று நிலவுகிறது. 14,000 கரசேவகர்கள் அயோத்திக்குச் சென்றிருப்பதாக உள்துறை அமைச்சர் இன்று கூறினார். இன்று முதல் மணிக்கு மணி இந்தக் கூட்டம் பெருகிக் கொண்டே இருக்கும். இலட்சக் கணக்கில் இவர்கள் கூடியதற்குப் பிறகு எப்படி நீங்கள் தடுக்க முடியும்?

பலாத்காரத்தைப் பிரயோகித்தால் இரத்தக்களறிதானே ஏற்படும்? விபரீதம் வருமுன் தடுப்பது தானே முறையான நடவடிக்கை?

1992–இல் பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு முன்பு இந்தியத் துணை இராணுவப் பிரிவுகள் 148 கம்பெனி அயோத்தியில் குவிக்கப்பட்டிருப்பதாகவும், எட்டு நிமிடத்திற்குள் எந்த அசம்பாவிதமும் நேராமல் தடுப்போம் என்றும் அன்றைய மத்திய அரசு மார்தட்டியதே! ஆனால் நடந்தது என்ன?

மசூதி இடிக்கப்பட்டபோது கைகட்டி வேடிக்கைதானே பார்த்தது இராணுவம்? அதுபோன்ற நிலை இப்பொழுது ஏற்பட்டு விடக்கூடாது.

அன்று மசூதி இடிக்கப்பட்ட பின்னர் ஒன்றும் நடந்து விடவில்லையே! வானம் இடிந்து விழவில்லையே! என்று சிலர் வாதிடக் கூடும். 92 – வேறு; 2002 வேறு. கடந்த பத்தாண்டுகளில் நிலைமை மாறி இருக்கிறது.

எல்லையிலே பதட்டம்; நம் நாட்டைச் சீர்குலைக்க பாகிஸ்தான் ஊக்குவிக்கும் பயங்கரவாதம்; 20 கோடி இஸ்லாமிய மக்களின் உள்ளத்தில் நெருப்பு வைக்க அக்கறையுள்ள சக்திகளின் முனைப்பான திட்டம்; இதற்குப் பலியாகும் வாய்ப்புள்ள இளைய தலைமுறை இவையெல்லாம் எண்ணிப் பார்த்து வெறுப்பும் வேற்றுமையும் சிறுபான்மை இளைஞர்களின் உள்ளத்தில்

விதைக்கப்படுமானால் விளைவுகள் விபரீதமாக இருக்கும், மத ஒற்றுமை நாசமாகும். இந்தியாவின் ஒருமைப்பாடு உடையும். பின்னர் வருந்திப் பயனில்லை.

எனவேதான், நாட்டின் எதிர்காலத்தைப் பற்றிய கவலை இருப்பதால் விருப்பு வெறுப்பின்றி என் அச்சத்தையும் கவலையையும் இந்தக் கூட்டத்தில் சொல்லாவிடில் நான் கடமை தவறியவனாகி விடுவேன். பிரச்சினைக்குரிய இடம் 30 செண்ட்டுகள் தான் என்றும்; மீதமுள்ள 70 ஏக்கர் நிலத்தில் பிரச்சினை இல்லை என்றும் சொல்லப்படுகிறது. மொத்தமுள்ள 70 ஏக்கரையும் மத்திய அரசு கையகப்படுத்தியுள்ளது. எனவே, நாட்டின் எதிர்காலத்தைக் கருதி மொத்த இடத்தையும் நீதிமன்றத் தீர்ப்பு வரும்வரை மத்திய அரசு யாரிடமும் ஒப்படைக்கக் கூடாது.

அயோத்தியில் கரசேவகர்கள் கூட்டம் கூடுவதைத் தடுத்தேயாக வேண்டும். துணை இராணுவப் படையிரைத் தேவையான அளவு அங்கு அனுப்ப வேண்டும். அவர்களைக் கொண்டு அயோத்தியைச் சுற்றிலும் தடுப்புச் சுவர் போல வேலி அமைக்க வேண்டும். கோவில் கட்டுவதற்கான பொருள்களை அங்கு கொண்டு செல்ல அனுமதிக்கக் கூடாது. இந்திய நாடாளுமன்றத்தின் மீது பாகிஸ்தான் பயங்கரவாதிகள் டிசம்பர் 13–இல் தாக்குதல் நடத்திய போது 100 கோடி இந்தியர்களும் ஒன்றுபட்டு அக்கொடுஞ்செயலை எதிர்த்தனர். உலக நாடுகள் அனைத்தும் நம்மை ஆதரித்தன. இஸ்லாமிய நாடுகளின் ஆதரவும் நமக்கே கிடைத்தது. எனவே, இதனையெல்லாம் கருத்தில் கொண்டு சிறுபான்மை மக்களின் உள்ளத்தைக் காயப்படுத்தும் காரியங்களை அயோத்தியில் நடக்க அனுமதிக்காமல் மத்திய அரசு தேவையான அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டும் என பிரதமரை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்".

(சங்கொலி 15–3–2002)

நன்றி : ஹிந்து. தமிழாக்கம் : தீக்கதிர், 09–03–2002

முடிவாக

சபர்மதி ரயிலில் பயணம் செய்த கரசேவர்களை படுகொலை செய்தவர்களை கண்டு பிடித்து தண்டிப்பது அரசின் கடமையாகும். கோத்ராபகுதி இஸ்லாமிய மக்கள் அதிகம் வாழும் பகுதியாகும். ரயில் சம்பவத்தைத் தொடர்ந்து குஜராத் வரை உள்ள இஸ்லாமிய மக்களின் சொத்துக்களை கொள்ளையடிப்பது, அம்மக்களைக் கொல்வது, என்ற பயங்கர நடவடிக்கைகளில் மதவெறி சக்திகள் ஈடுபட்டுள்ளது. 'தி எக்னாமிக்ஸ் டைம்ஸ்' பத்திரிகையில் அதன் நிருபர் சத்யேந்திர ஸ்ரீவத்சவா இது குறித்து எழுதுகையில் 'குஜராத் மாநிலத்தில் விஸ்வஹிந்துபரிஷத் நடத்திவரும் வெறியாட்டத்தில் தினமும் இழப்பு 500 கோடி ரூபாய்' என்று குறிப்பிட்டுள்ளார். (தீக்கதிர். 8-3-2002)

இத்தகைய நாசகாரியங்களுக்கு மூல காரணமான அயோத்தி பிரச்சனையில் உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி நடக்க வேண்டும் என்று மக்களுக்கு ஒரு முகத்தையும், விஸ்வஹிந்துபரிஷத்தின் கோரிக்கை நியாயமானது என்று மறுபுறம் மதவாதமுகம் காட்டும் மத்திய அரசின் போக்கினை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று நாட்டின் நலன் கருதி வேண்டுகிறோம்.

13-03-2002

அயோத்தியில் பூமி பூஜை நடத்துவது என்ற விசுவஹிந்து பரிஷத் எடுத்த முடிவு குறித்து நீதிபதிகள் பி.என். கிர்பால், ஜி.பி. பட்நாயக், வி.என். கரே ஆகியோர் அடங்கிய பெஞ்ச் விசாரணையை உச்சநீதிமன்றம் மேற்கொள்கிறது. நீதி மன்றத் தீர்ப்புக்களை இருசாராரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். நாட்டில் அமைதி நிலவிட வேண்டும்; சமய ஒற்றுமைகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

என்று மடியும் இந்த மதங்களின் பேதம் !
என்று தணியும் எங்களின் அன்புத் தாகம் !!

பிரார்த்தனை செய்ய வேண்டுகிறோம்

இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக 1927இல் சட்ட மறுப்பு இயக்கத்தில் *(Civil Disobedience Movement)* பங்கேற்றுச் சிறை சென்ற சுதந்திரப் போராட்டத் தியாகியும், தென்காசி கடையத் தெரு, மர்ஹூம் **P.S.** சாகுல் **ஹமீது** இராவுத்தரின் புதல்வரும், மர்ஹூம் கண்ணியத்திற்குரிய மாவட்ட கல்வி அலுவலர் **A.S. சுலைமான் M.A.,M.Ed.,** அவர்களின் தந்தையாரும், எங்களது தாத்தாவுமான செங்கோட்டை மேலூர் மர்ஹூம் **P.N.S. அப்துல் மஜீத் இராவுத்தர்** * ஆகியோர் மறுஉலக நற்பேற்றிற்கும், நல்வாழ்விற்கும் இறையருள் இறைஞ்சுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

S.M.A.Q. ஜெய்லானி **செ. திவான்**

* Who is who of Freedom Fighters, Tamil Nadu, Vol. III, 1973, P 55.

நூலாசிரியர் - வரலாற்றாசிரியர்

செ. திவான் M.A.,M.Phil., எழுதிய, பதிப்பித்த நூல்கள்

1. விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள்
(சீதக்காதி அறக்கட்டளையின் முதல் பரிசு ரூ. 10,000 பெற்ற நூல்)
2. நிகரற்ற பெருவீரன் மருதநாயகம் கான்சாகிப்
(உணர்வு வார இதழ் நடத்திய போட்டியில் ரூ. 5000 பரிசு பெற்ற நூல்)
3. ஆரிய மாயை அகல...
(சங்கொலி வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5000 பரிசு பெற்ற நூல்)
4. திருகுர்ஆன் தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்.
5. நபி பெருமானாரின் நாற்பது பொன்மொழிகள்.
6. தக்கலை பீர் முகம்மது (ரஹ்) ஞானப்பாடல்களும் சரிதையும்.
7. இந்திய சுதந்திரப் போரில் நெல்லை மாவட்ட முஸ்லிம்கள்.
8. வ.உ.சி.யின் அழகும் ஆரோக்கியமும்
9. குடை
10. சிந்தனைக்கு
11. வ.உ.சி. யின் துன்பத்தின் கற்பனை
12. வ.உ.சி.யும் பெரியாரும்
13. வ.உ.சி.யும் தொல்காப்பியமும்
14. வ.உ.சி. பாடல்கள்
15. வ.உ.சி.யின் அரசியல் பெருஞ்சொல்
16. தெற்கில் ஒலித்த தீன்குரல்
17. விடுதலைப்போரில் விஸ்வகர்மாக்கள்
18. பாரதியும் காங்கிரசும்
19. ஸ்டெர்லைட்டை விரட்டுவோம்
20. உண்மையின் சவுக்கடி
21. கூடங்குளம் அணுஉலையை மூடு
22. குடைப்புரட்சி
23. மக்கள் திலகமும் மக்கள் தலைவரும்
24. வாகை சூடி வரும் வைகோ
25. கலைஞரை வென்ற வைகோ
26. வைகோவின் பொன்மொழிகள்
27. சேதுசமுத்திர திட்ட வரலாற்று நாயகன் வைகோ
28. வ.உ.சி. புகழ் பாடிய முன்னோடிகள்
29. வ.உ.சி.யின் நூற்கோவை
30. வ.உ.சி.யும் பரலி சு.நெல்லையப்பரும்
31. ஆன்மிகச் சிந்தனை
32. வேதங்கள் வெறுத்திடும் விக்கிரக வழிபாடு
33. செய்குத்தம்பி பாவலரின் ஷம்சுத்தாசீன் கோவை
34. கட்டபொம்மனின் கடைசி நாட்கள்
35 வி.ஓ.சி. கண்ட பாரதி
36. இறைநேசச் செல்வர் சிந்தா ஷெய்கு மதார்ஷா (ஒலி)
37. வ.உ.சி.யின் வள்ளியம்மை சரித்திரம்
38. இறைவனின் திருநாமங்கள்
39. இறுதித்திருநபியும் இயற்கையின் அற்புதங்களும்
40. அண்ணாவின் மறுபக்கம்
41. மாற்றார் மதித்திடும் மாநபி (ஸல்)
42. பெரிய புராணத்தில் வாழ்க்கை நெறி
43. வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப் (ஆய்வு நூல்)
44. ஆரியப்பாதையில் பசுவதை. . (அரிய ஆய்வு நூல்)
45. கட்டபொம்மனும் கலெக்டர் ஜாக்சனும்
46. சதாவதானி செய்குத்தம்பி பாவலரின் நபிகள் நாயக மான்மிய மஞ்சரி
47. விடுதலையின் நிறம் பச்சை
48. வ.உ.சி.யும் திருக்குறளும்
49. அணைய வேண்டிய அயோத்'தீ'...
50. ஆலிப்புலவர்.